செய்தி வெளியீடு எண் 135 நாள் 06.03.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ. 58 இலட்சத்து 91 ஆயிரம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (06.03.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பெற்றுக் கொண்டார். மேலும் இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 97 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 117 மனுக்களும், சமூக நலத்திட்டம் 07 மனுக்களும், குடும்ப அட்டை 01 மனுவும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 4 மனுவும், வேலைவாய்ப்பு 31 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 10 மனுக்களும், ஊரக / நகர்புற வளர்ச்சி 29 மனுக்களும், கடனுதவி 10 மனுக்களும், அடிப்படை தேவை / போக்குவரத்து / சுகாதாரம் 02 மனுக்களும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 07 மனுக்களும், இதரதுறை 51 மனுக்களும், பேரிடர் 26 மனுக்களும், சான்றிதழ் 21 மனுக்களும், சான்றிதழ் நகல் 01 மனுவும் என மொத்தம் 414 மனுக்கள் பெறப்பட்டது.

இம்மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும், பயனாளிகளுக்கு உதவிடும் வகையில் விரைந்து பரிசீலிக்க வேண்டும் என துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் முன்னாள் படை வீரர் நலம் சார்பாக 04 நபர்களுக்கு கல்வி உதவித்தொகை, 6 நபர்களுக்கு ஈமச்சடங்கு உதவித்தொகை, மொத்தம் ரூ.81,000/-, வருவாய் துறை சார்பாக 5 நபர்களுக்கு பழங்குடியினர் சாதிச் சான்றிதழ்கள், 1 நபருக்கு, 6 நபர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரணத்திட்டத்தின் கீழ் விபத்து நிவாரண தொகை தலா ரூ.ஒரு லட்சத்திற்கான (6X ரூ.1,00,000= ரூ.6,00,000) காசோலையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக 25 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு நேரடி வங்கி கடன் மற்றும் நலிவுற்றோர் ஆதார நிதியாக ரூ.52,10,000/-,த்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.திவ்யஸ்ரீ, உதவி இயக்குநர் (முன்னாள் படை வீரர் நலன்) திருமதி.அமீருனிஸா, திட்ட அலுவலர் (தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்) திருமதி.கிருஷ்ணம்மாள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~